






# இடைத் தேர்தல்
# ஜனவரி–15

Ward 22 Scarborough-Agincourt | toronto.ca/byelection

TORONTO

Call 311







## புதிது! மெயில்-இன் வாக்குமுறை

நேரடியாக வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்கு செலுத்தும் முறைக்குப் பாதுகாப்பான மற்றும் இடரற்ற மாற்றுத் தேர்வாக, அஞ்சல் வாக்கு செலுத்தும் முறையை டொராண்டோ எலக்ஷன்ஸ் அறிமுகப்படுத்துகிறது.

### படி1: அஞ்சல் வாக்கு உரிமைக்கு விண்ணப்பியுங்கள்

டிசம்பர்-2, 2020 முதல் ஜனவரி 4, 2021 மாலை 4 மணி வரை toronto.ca/votebymail வலைத்தளப் பக்கத்திற்குச் சென்று விண்ணப்பிக்கவும்.

### படி2: உங்கள் அஞ்சல் வாக்குத் தொகுப்பைப் பெறுங்கள்

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்பப்படும் அஞ்சல் வாக்குத் தொகுப்பில் கீழ்கண்டவை அடங்கும்:

- உங்கள் வாக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அவசியத் தேவையான, கையொப்பமிட்டுச் சமர்ப்பிக்கவேண்டிய உறுதி ஆவணம்
- கவுன்சிலர் வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் இடைத்தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ வாக்குச் சீட்டு
- வாக்குச் சீட்டு இரகசிய உறை
- அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்ட மஞ்சள் நிற திருப்பி அனுப்பும் உறை

### படி 3: மஞ்சள் நிற உறையைத் திருப்பி அனுப்புங்கள்

உங்கள் வாக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட, பின்வரும் படிகளை நிறைவேற்றவும்:

- உறுதி ஆவணத்தில் **கையொப்பமிட்டு**, மஞ்சள் நிற திருப்பி அனுப்பும் உறைக்குள் இடவும்
- உங்கள் வாக்கைக் **குறித்தபின்** வாக்குச் சீட்டை இரகசிய உறைக்குள் வைக்கவும்
- முத்திரையிடப்பட்ட இரகசிய உறையை மஞ்சள் நிற திருப்பி அனுப்பும் உறைக்குள் **இடவும்**
- ஜனவரி 8 முதல் ஜனவரி 15 வரை அஞ்சல் அல்லது டிராப் பாக்ஸ் மூலம் கீழ்வரும் இரண்டு முகவரிகளில் ஒன்றுக்கு இந்த மஞ்சள் நிற திருப்பி அனுப்பும் உறையை **அனுப்பவும்**

Stephen Leacock Seniors Community Centre
2520 Birchmount Road, Toronto

**OR**

L'Amoreaux Community Recreation Centre
2000 McNicoll Avenue, Toronto

உங்கள் வாக்குச்சீட்டு மற்றும் கையொப்பமிடப்பட்ட உறுதி ஆவணம் உட்பட அனைத்து ஆவணங்களும் கொண்ட அஞ்சல் வாக்கு **ஜனவரி 15 மாலை 6 மணிக்குள் அவசியம்** வந்தடையவேண்டும்.

உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியவில்லை என்றால் 311-ஐ அழைக்கவும்.

**அஞ்சல் வாக்கு உரிமைக்கு விண்ணப்பிக்க:** toronto.ca/votebymail

## வாக்களிக்கும் நாட்கள் மற்றும் அடையாளங்காணல்

### தேர்தல் நாள்

ஜனவரி-15, 2021 வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.

உங்கள் வாக்களிப்பு மையம் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது அல்லது MyVote: **toronto.ca/myvote** பக்கத்திலும் அதைக் காணலாம். அனைத்து வாக்களிப்பு மையங்களும் எளிதாக அணுகக்கூடியதாக இருக்கும் மற்றும் அவ்விடங்களைப் பற்றிய தகவல்களை MyVote-இல் காணலாம்.

### முன்கூட்டிய வாக்கு

ஜனவரி-8, 2021 வெள்ளிக்கிழமை, ஜனவரி-10,2021 ஞாயிற்றுக் கிழமை, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை.

உங்கள் வாக்காளர் தகவல் அட்டையை அச்சிட அல்லது வாக்களிக்கச் செல்லும்போது ஸ்மார்ட் போனில் டிஜிட்டல் முறையில் காண்பிக்க MyVote-ஐ பயன்படுத்தவும்.

### நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது

வாக்களிக்கும் தகுதி பெற நீங்கள்:

- கனடா நாட்டுப் பிரஜையாக இருக்கவேண்டும்;
- குறைந்தது 18 வயதை எட்டியிருக்கவேண்டும்;
- வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட்டில் வசிப்பவர்; அல்லது டொராண்டோவில் வசிக்காத, ஆனால் நீங்களோ உங்கள் மனைவியோ வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட்டில் வீட்டின் உரிமையாளராக அல்லது வாடகைக்கு எடுத்துள்ளவராக இருக்கவேண்டும்; மற்றும்
- எந்தவொரு சட்டத்தின் கீழும் வாக்களிக்கத் தடை விதிக்கப்படாதவராக இருக்கவேண்டும்.

வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட்டில் எத்தனை வீடுகள் வைத்திருந்தாலும் வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் இடைத்தேர்தலில் ஒரு முறை மட்டுமே வாக்களிக்க முடியும்.

வாக்களிக்கும் இடத்தில்:

- முகக் கவசம் அல்லது முக உறை அணியவும், டொராண்டோ நகரில் உள்ள அனைத்து உட்புற பொது இடங்களுக்கும் இது கட்டாயமாகும்.
- தேர்தல் அதிகாரிகள் வழங்கும் வழிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றவும்.

- வாக்களிக்கும் இடத்தில் போதிய சமூக இடைவெளியைப் பராமரிக்கவும் - 2 மீட்டர் (6 அடி) இடைவெளி.
- வாக்களிக்கும் இடத்திற்குள் நுழையும் போதும் வெளியேறும் போதும் உங்கள் கைகளை சானிடைசர் கொண்டு தூய்மைப்படுத்தவும்.

## அடையாளங்காணல் (ஐடி)

வாக்களிக்க, உங்கள் பெயர் மற்றும் தகுதி வாய்ந்த வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் முகவரியைக் கொண்ட அடையாளத்தைக் காட்ட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாளங்களின் பட்டியலை டொராண்டோ எலக்ஷன்ஸ் இணையதளத்தில் காணலாம்: **toronto.ca/byelection.**

உங்களிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஐடி இல்லை என்றால் மற்றும் வாக்காளர்களின் பட்டியலில் பெயர் இல்லை என்றால், உங்கள் ஐடியை எடுத்துக் கொண்டு வந்து வாக்குச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.

வாக்களிப்பு மையத்தில் செலவிடும் நேரத்தைக் குறைக்க:

- முன்கூட்டிய வாக்களிப்புக்கு முன்னதாகவே உங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்.
- வாக்குச் சீட்டைப் பெற, உங்கள் பெயர் மற்றும் தகுதி வாய்ந்த வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் முகவரியைக் கொண்ட ஐடியைக் காட்டவும்.
- உங்கள் வாக்காளர் தகவல் அட்டையைக் கொண்டுவரவும்.
- நெரிசல் இல்லாத நேரத்தில் வாக்களிக்கச் செல்லவும். மாலை 5 மணி முதல் வாக்களிப்பு நேரம் முடியும் வரை கூட்டம் அதிகமாக இருக்கும்.

**வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைச் சேர்ந்திருந்தாலும், வாக்களிக்கச் செல்லும்போது ஐடியைக் காட்ட வேண்டியது அவசியமானது.**

# வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்த்தல்

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா, அதில் உள்ள தகவல்கள் சரியா என்பதைச் சரிபார்க்கவும்; குறிப்பாகக் கடந்த தேர்தலுக்குப் பிறகு உங்கள் பெயரை மாற்றியிருந்தால் அல்லது இருப்பிடத்தை மாற்றியிருந்தால் இது மிகவும் அவசியமானது.

டொராண்டோ நகர வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருந்தால் டிசம்பர் 21 முதல் அஞ்சல் மூலம் அனுப்பப்படும் வாக்காளர் தகவல் அட்டையைப் பெறுவீர்கள் எனப் பொருளாகும். வாக்காளர் தகவல் அட்டையை வைத்திருப்பது வாக்களிப்பு மையங்களில் நீங்கள் செலவிடும் நேரத்தைக் கணிசமாகக் குறைக்க உதவும்.

அஞ்சல் வாக்கு உரிமைக்கு விண்ணப்பிக்க உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்க.

டொராண்டோ நகர வாக்காளர் பட்டியலில் **டிசம்பர் 2-ஆம் தேதி முதல்** திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

- MyVote: **toronto.ca/myvote** வலைதளப்பக்கம் மூலம் அல்லது 311-ஐ அழைப்பதன் மூலம் வாக்காளர் பட்டியலில் உங்கள் தகவல்களை நீங்கள் சரிபார்க்கலாம், மாற்றலாம் அல்லது சேர்க்கலாம்.

## MyVote

வார்டு 22 ஸ்கார்பாரோ–அஜின்கோர்ட் இடைத்தேர்தலுக்கான அனைத்து முக்கியத் தகவல்களையும் காண MyVote-ஐ பயன்படுத்தவும்.

MyVote பயன்படுத்த எளிதானது, உங்கள் டொராண்டோ முகவரியை உள்ளிட்டு நீங்கள்:

- வாக்காளர் பட்டியலில் உங்கள் தகவலை மாற்றலாம், சரிபார்க்கலாம் அல்லது சேர்க்கலாம்
- எங்கு, எப்போது வாக்களிக்க வேண்டும் என்பதை அறியலாம்
- உங்கள் வாக்காளர் தகவல் அட்டையைச் சரிபார்த்து அச்சிடலாம் (நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்கள் வாக்காளர் தகவல் அட்டையை டிஜிட்டல் முறையிலும் பயன்படுத்தலாம்.
- வேட்பாளர்களின் பட்டியலைக் காணலாம்
- வாக்களிப்பு மையம் உள்ள இடத்தை எளிதாக அணுகத் தேவையான தகவல்களைக் கண்டறியலாம்
- மாதிரி வாக்குச்சீட்டைக் காணலாம்
- வார்டு 22 ஸ்கார்பாரோ–அஜின்கோர்ட்டின் வரைபடத்தைக் காணலாம்
- வாக்களிக்கும் இடங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை, எனவே வாக்களிக்கச் செல்வதற்கு முன் MyVote-இல் சோதிக்கவும்.

**வாக்களிக்கச் செல்லும்போது**
**வாக்களர் தகவல் அட்டையைத் தவறாமல் எடுத்துச் செல்லவும்.**

## வாக்களிக்கும் இடத்தைப் பாதுகாப்பானதாக ஆக்குதல்

வாக்காளர் மற்றும் தேர்தல் பணியாளர்களின் நலனுக்காக வாக்களிக்கும் இடங்களைப் பாதுகாப்பாகப் பராமரிப்பதற்காக பின்வரும் சிறந்த நடைமுறைகளை உருவாக்க, டொராண்டோ எலக்ஷன்ஸ் டொராண்டோ பொது சுகாதாரத் துறையுடன் ஆலோசனை நடத்தியுள்ளது:

- அனைத்து வாக்காளர்களும் சுய-ஆய்வுக் கேள்விகளைச் சரிபார்ப்பதையும், முகக்கவசம் அல்லது முக உறை அணிந்திருப்பதையும் உறுதிசெய்ய ஒவ்வொரு வாக்களிப்பு மையத்திலும் நுழைவாயிலில் சுகாதார ஆய்வு அதிகாரியை நியமித்தல். டொராண்டோ நகரில் உள்ள அனைத்து உட்புற இடங்களிலும் முகக்கவசம் அல்லது முக உறை அணிவது கட்டாயமாகும்.
- கட்டாய முகக்கவசத் தேவையிலிருந்து விலக்குப் பெற்றவர் எவரேனும் இருந்தால், அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் பராமரிக்கும் வகையில் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை டொராண்டோ எலக்ஷன்ஸ் எடுத்து அவர்கள் வாக்களிக்க உதவும்.
- திசை மற்றும் சமூக இடைவெளியைப் பராமரிக்க அடையாளக் குறிகள் மற்றும் தரையில் அடையாளக்குறிகளை இடுதல்.
- வாக்காளர்களுக்காக அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் சானிடைசர் வழங்குதல்.
- அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகள் மற்றும் பொருள்களை அவ்வப்போது சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்தல்.
- மார்கிங் பேனாக்கள் மற்றும் இரகசியக் கோப்புறைகள் போன்ற ஒற்றைப் பயன்பாட்டுப் பொருட்களை வழங்குதல்.
- சமூக இடைவெளியைப் பராமரிக்க, நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களை அடையாளம் காணுதல்.
- வாக்களிக்கும் இடத்தில் பணியாற்றும் தேர்தல் பணியாளர்களுக்கு முகக் கவசம், சானிடைசர் போன்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல்.
- வாக்களிக்கும் இடத்தில் பணியாற்றும் தேர்தல் பணியாளர்களுக்குச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த பயிற்சியை அதிகரித்தல்.
- பல வகையான வாக்களிக்கும் வாய்ப்புகள் மற்றும் முறைகளை வழங்குதல்.

நீங்கள் COVID-19 தொடர்பான அறிகுறிகளைக் கொண்டிருந்தால், தயவுசெய்து வீட்டிலேயே இருங்கள் மற்றும் பிற வாக்களிப்பு விருப்பங்களை அறிய 311-ஐ தொடர்பு கொள்ளுங்கள். அறிகுறிகள் பற்றி அறிய இங்கு செல்லவும்: **toronto.ca/covid19**.

## அஞ்சல் வாக்கு

கவுன்சிலர் வார்டு 22 ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட்டுக்கான 2021 இடைத்தேர்தலில் அஞ்சல் வாக்கு முறையை டொராண்டோ எலெக்ஷன்ஸ் அறிமுகப்படுத்துகிறது. தகுதி பெறும் வாக்காளர்கள் நேரடியாகச் சென்று வாக்களிப்பதற்கு மாற்றுத் தேர்வை இந்த அஞ்சல் வாக்கு வழங்குகிறது. **புதிது! அஞ்சல் வாக்கு** குறித்த தகவலை இந்தத் துண்டுப் பிரசுரத்தில் ஆய்ந்தறியவும்.

**தகுதி பெறும் வாக்காளர்கள் டிசம்பர் 2, 2020 முதல்** ஜனவரி 4, 2021 **மாலை 4 மணி வரை அஞ்சல் வாக்கு உரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.**

## வாக்காளர் தகவல் அட்டையை டிஜிட்டல் முறைக்கு மாற்றுதல்

டொராண்டோ எலெக்ஷன்ஸ் உங்களுக்காக டிஜிட்டல் வாக்காளர் தகவல் அட்டைக்கான விருப்பத்தேர்வை வழங்குகிறது. **toronto.ca/myvote** வலைத்தளப் பக்கத்தில் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்க்கலாம் மற்றும் வாக்களிக்கச் செல்லும்போது அதை உங்கள் ஸ்மார்ட் போனில் டிஜிட்டல் முறையில் பயன்படுத்தலாம்.









## அணுகல் மற்றும் வாக்களிப்புத் தேர்வுகள்

## அணுகத்தக்க வாக்கு இயந்திரம்

வாக்காளர் உதவி முனையம் என்பது மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற சிறப்புத் தேவைகளைக் கொண்ட வாக்காளர்கள் தங்கள் வாக்கை சுயாதீனமாகக் குறிக்க அனுமதிக்கும் வாக்குப் பதிவுச் சாதனமாகும். தொடுதிரை, ஆடியோ பகுதி, பிரெயில் கீ பேட், சிப்/ப∴ப் டியூப் சாதனம், ராக்கர் பேடில்/∴புட் சுவிட்ச் மற்றும் எழுத்தின் அளவுகள் மற்றும் வண்ண மாறுபாட்டை மாறுபடுத்த உதவும் ஜூம் அம்சங்கள் இதில் அடங்கும்.

வாக்களிக்கும் நாட்கள் எதிலும் இந்த வாக்காளர் உதவி முனையத்தைப் பின்வரும் இடங்களில் உபயோகிக்கலாம்:

ஸ்டீபன் லியகாக் சீனியர்ஸ் கம்யூனிட்டி சென்டர்
2520 பிர்ச்மவுண்ட் ரோடு, டொராண்டோ

**அல்லது**

லேமரோ கம்யூனிட்டி ரெக்ரியேஷன் சென்டர்
2000 மெக்நிகோல் அவென்யூ, டொராண்டோ

## பிரதிநிதி வாக்காளர்

ஏதேனும் காரணங்களுக்காக வாக்களிப்பு நாட்களில் உங்களால் வாக்களிக்க முடியாவிட்டால் மற்றும் அஞ்சல் வாக்கு உரிமைக்கு விண்ணப்பிக்க விரும்பவில்லை என்றால், பிரதிநிதி வாக்காளர் நியமனப் படிவத்தைப் பூர்த்தி செய்து உங்கள் சார்பாக வாக்களிக்க ஒரு பிரதிநிதியை நியமிக்கலாம். பிரதிநிதி வாக்காளர் நியமனப் படிவங்கள் டிசம்பர் 2 முதல் கிடைக்கும், மேலும் elections@toronto.ca -ஐத் தொடர்புகொள்வதன் மூலமோ 311-ஐ அழைப்பதன் மூலமோ இதை மின்னஞ்சல் அல்லது அஞ்சல் மூலம் பெறலாம்.

**குறிப்பு:** பிரதிநிதி வாக்காளர் நியமனப் படிவங்களின் தகுதிச் சான்றளிப்பு 89, நார்த்லைன் ரோடு என்ற முகவரியில் நியமனத்தின் பேரில் வழங்கப்படும்

மேலதிகத் தகவல்களை டொராண்டோ எலெக்ஷனஸ் இணையதளத்தில் காணலாம்: **toronto.ca/byelection.**

## கிடைக்கும் மற்ற தேர்வுகள்

- வாக்களிக்கும் முறை குறித்த அறிவுறுத்தல்கள் அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் 26 மொழிகள் மற்றும் பிரெய்லி வடிவத்தில் கிடைக்கும். இவற்றை டொராண்டோ எலெக்ஷன்ஸ் வலைத்தளத்திலும் காணலாம்: **toronto.ca/byelection.**
- பார்வைக் குறைவுக் கோளாறு கொண்ட வாக்காளர்களுக்கு உதவ அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் உருப்பெருக்கத் தாள்கள் கிடைக்கும்.
- காது கேளாதோர் அல்லது கேட்கும் திறன் குறைந்தோர் TTY லைனை 416-338-OTTY (0889) என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் தேர்தல் சார்ந்த தகவல்களைப் பெறலாம்.
- நீங்கள் வாக்கைச் சுயமாகக் குறிக்க முடியாத நிலையைக் கொண்டவர் என்றால் உங்களுக்கு உதவ ஒரு நண்பரை அழைத்து வரலாம் அல்லது தேர்தல் அதிகாரியிடம் உதவி கேட்கலாம்.
- உதவியாளர் மற்றும் சேவை விலங்குகளின் பயன்பாடு அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் ஏற்கப்படுகிறது.

இத்தேர்வுகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் அல்லது உடல் ரீதியாக உங்களால் வாக்களிப்பு மையத்திற்குள் செல்ல முடியவில்லை என்றால் 311-ஐ அழைக்கவும்.